## கழக அரசில் மருத்துவத் துறையின் கட்டமைப்புகள், ஏழைகளின் மொழியில் எழுதப்பட்டவை! ஆனால் இது வெற்றுக் கூச்சல் பட்ஜெட்!

# ‘நீட்’ ஒழிப்புக்கென உறுதியான நடவடிக்கை எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை!

## சட்டப் பேரவையில் – மருத்துவத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் – விழுப்புரம் – டாக்டர் இலட்சுமணன் பேச்சு!

**சென்னை, ஆக. 22 -**

**சட்டப் பேரவையில் மருத்துவத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கழகத்தின் சார்பில் பங்கேற்றுப் பேசிய விழுப்புரம் தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் இலட்சுமணன், “நீட் ஒழிப்பு குறித்து முழங்குகிற இந்த ஆட்சியினர் சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டில் - ‘நீட்’ ஒழிப்புக்கென உறுதியான நடவடிக்கையோ, திட்டமோ எதுவும் இல்லாத, வெற்றுக் கூச்சல் பட்ஜெட்டாக உள்ளது” என்று குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் – கழக உறுப்பினர் – விழுப்புரம் டாக்டர் லட்சுமணன் பேசியதாவது:–

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிட விழைகிறேன்.

நடைபெற்ற தேர்தலில் எனக்கு விழுப்புரம் தொகுதியில் இரண்டாவது முறையாக போட்டியிட வாய்ப்பளித்த எங்கள் கழகத் தலைவர் பெரும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் போற்றுதலுக்குமுரிய தலைவர் தளபதியார் அவர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றி. என் வெற்றிக்கு உறுதுனையாக இருந்த எதிர்க் கட்சித் தலைவர் எங்கள் இயக்கத்தினுடைய இளைஞர் அணி செயலாளர். இளந்தலைவர் அண்ணன் உதயநிதி அவர்களுக்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டுள்ளேன்.

இரண்டாவது முறையாக எனக்கு வாக்களித்து, என்னை வெற்றி பெறச் செய்த, விழுப்புரம் சட்ட மன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கழகத்தினருக்கும், ஏனைய விழுப்புரம் வாழ் அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இந்த அவையில் நின்று மிகுந்த மன நெகிழ்ச்சியுடன் தலைவணங்கி தெரிவித்துக்கொள்கிறேன்

இந்த அவையில் எங்களை வழி நடத்தும் தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கும் சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில் இந்த பட்ஜெட்டில் சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பற்றி ஒரு உண்மையை இந்த சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கின்றேன்.

இந்த வரவு – செலவு அறிக்கையில் சுகாதாரத் துறைக்கு 23,357 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலோட்டமாகக் கணக்குப் பார்த்தால் இது 5.74% கூடுதல் நிதி. ஆனால், ”தங்க மோதிரம் என்ற விளம்பரத் திட்டத்தின் 560 கோடி ரூபாயைக் கழித்துவிட்டால், மருத்துவக் கட்டமைப்புக்கான உண்மையான நிதி உயர்வு வெறும் 3.2% மட்டுமே. தமிழ்நாட்டின் இன்றைய சுகாதாரத் தேவைகளுக்கு இந்த நிதி போதுமானதா? என்பதுதான் முக்கியமான கேள்வி.

முந்தைய கழக (DMK) ஆட்சியில் கடைசி இரண்டு முழு பட்ஜெட்டுகளிலும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான நிதி, ஆண்டுக்கு சராசரியாக 8.35% உயர்த்தப்பட்டது (2024–25ல் 8.24% 2025–26 8.46%).

எங்கள் தலைவர் முன்னாள் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு பல புதிய திட்டங்களை செயல்படுத்தியது.

### திராவிட மாடல் ஆட்சிக்கு தேசிய சர்வதேச அளவில் அங்கீகாரம்!

தமிழ்நாட்டின் சுகாதாரத்துறை கடந்த திராவிட மாடல் ஆட்சியில் பெற்றுள்ள முன்னேற்றங்கள், வெறும் மாநில அளவிலான சாதனைகள் மட்டுமல்ல. அவை தேசிய மற்றும் சர்வதேச அளவிலும் அங்கீகாரம் பெற்றவை

தேசிய சுகாதார இயக்கத்தின் (National Health Mission)கீழ், தாய்–சேய் நலன், தடுப்பூசி இயக்கம், மற்றும் தொற்றுநோய் கட்டுப்பாடு ஆகியவற்றில், சிறந்த செயல்திறனுக்கான விருதுகள்

காசநோய் (TB) கட்டுப்பாட்டில் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்ததற்கான தேசிய அங்கீகாரம்

கொரோனா காலத்தில் சிறந்த மேலாண்மை மற்றும் தடுப்பூசி விநியோகத்தில் இந்திய அரசின் பாராட்டு

பொது சுகாதாரக் கட்டமைப்பு, மற்றும் டிஜிட்டல் சுகாதார சேவைகளில் முன்னேற்றத்திற்கான பல்வேறு ஒன்றிய அரசின் விருதுகள் என்று. ஏராளமான தேசிய விருதுகளைப் பெற்ற அரசு திராவிட மாடல் அரசு.

அதேபோல், சர்வதேச அளவிலும் தமிழ்நாட்டின் செயல்பாடுகள் கவனம் பெற்றுள்ளன.

உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் யுனிசெஃப் (UNICEF) ஆகியவை தடுப்பூசி இயக்கம், தாய் – சேய் நலன் மற்றும் பொது சுகாதார சேவைகள் குறித்து தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை பாராட்டியுள்ளன.

தொற்றுநோய் கட்டுப்பாடு மற்றும் சமூக அடிப்படையிலான சுகாதார சேவைகள் குறித்து பல்வேறு சர்வதேச ஆய்வு அமைப்புகள் தமிழ்நாட்டை ஒரு முன்னுதாரன மாநிலமாகக் குறிப் பிட்டுள்ளன.

தமிழ் நாட்டில் 99.9 விழுக்காடு பிரசவங்கள் மருத்துவ மனைகளில் நடைபெறுவது நாட்டுக்கே முன்னோடி அதற்குக் காரணம் இது நாள் வரை நடைபெற்ற திராவிட மாடல் அரசு.

கடந்த ஐந்து ஆண்டுகளாக காப்பாற்றப் பட்ட உயிர்களிலும், நிரப்பப்பட்ட காலியிடங்களிலும், வென்ற சர்வதேச விருதுகளிலும் தன் வெற்றியை அளந்த ஓர் அரசை தமிழ்நாடு பார்த்தது

இன்று தன் லட்சியத்தை ஒரு கிராம் அளவில் அளக்கும் ஒரு அரசை பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

### வெறும் அறிவிப்புகள் மட்டும் வெளியிடாமல் சொன்னதைச் செய்தோம்!

நாங்கள் வெறும் அறிவிப்புகளை வெளியிடவில்லை சொன்னதைச் செய்தோம். சுமார் 40,000 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இது ஒரு முழக்கம் அல்ல இது கிராமுக்குக் கிராம் அல்ல. செங்கல்லுக்குச் செங்கல் கட்டியெழுப்பப்பட்ட ஒரு செயல்படும் சுகாதார அமைப்பின் சாதனை

நீங்களோ தேர்தல் நேரத்தில் செவிலியர்களை பணி நிரந்தரம் செய்வதாக நேரில் சந்தித்து வாக்குறுதி கொடுத்தீர்கள். ஆனால் வரவு செலவு திட்டத்தில் அதற்கான உறுதிமொழி எதுவுமில்லை. செவிலியர் பணி நிரந்தரம் எப்போது என்பதை நீங்கள் இங்கே அறிவிக்க வேண்டும்.

கொரோனா பெருந்தொற்று நேரத்தில் யாரும் நினைத்துகூட பார்த்திராத அளவிற்கு கொரோனா வார்டுகளுக்கே நேரில் சென்று ஆய்வு செய்த பெருந்தகை எங்கள் தலைவர் முன்னால் முதலமைச்சர் தளபதியார் அவர்கள்.

கடந்த தி.மு.க. அரசின் மிக முக்கியமான மக்கள் நலத் திட்டங்களில் ஒன்று மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்

இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்ன? நோயாளி மருத்துவமனையைத் தேடி வருவதற்காக காத்திருக்காமல், மருத்துவச் சேவையே மக்களைத் தேடிச் செல்ல வேண்டும்.

குறிப்பாக சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கு இந்தத் திட்டம் முக்கியத்துவம் அளித்தது.

மருத்துவப் பணியாளர்கள் மக்களின் வீடுகளுக்குச் சென்றனர். பரிசோதனை செய்தனர். மருந்துகள் வழங்கினர். தொடர்ந்து கண்காணித்தனர்.

27 நோய்களுக்காக 2.5 கோடிக்கும் அதிகமான மக்கள் வீட்டு வாசலிலேயே பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர். 1.13 கோடிக்கும் அதிகமான உயர் இரத்த அழுத்த நோயாளிகள் முதன்முறையாகச் சிகிச்சை பெற்றனர்.

### இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம்!

தி.மு.க. அரசின் முக்கியமான திட்டங்களில் மற்றொன்று ‘இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்

சாலை விபத்து ஏற்பட்டவுடன், முதல் சில மணி நேரங்கள் உயிரைக் காப்பாற்று வதற்கு மிகவும் முக்கியமானவை (Golden Hour என்பார்கள்).

அந்த நேரத்தில் பணம் இல்லாததால் ஒரு உயிர் இழக்கப்படக் கூடாது. அவசர சிகிச்சை உடனடியாகக் கிடைக்க வேண்டும்.

இந்த நோக்கத்தில்தான் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தை, வெறும் 493 கோடி ஒதுக்கீட்டில், 5,11,916 உயிர்களைக் காப்பாற்றி நடத்தினோம் இது அரசின் புள்ளிவிவரம்.

முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தினோம், எச்பிவி (HPV) தடுப்பூசி, புற்றுநோய் கண்டறியும் முகாம்கள் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களைத் நடத்தினோம்.

### உறுப்புதானத் திட்டம்!

மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்புகளை தானமாக வழங்கும் கொடையாளர்களின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடத்தப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அப்போதைய முதலமைச்சர் மதிப்புக்குரிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 2023 ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்த அறிவிப்புக்கு பிறகு தமிழ்நாட்டில் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை கனிசமாக உயர்ந்துள்ளது.



ஆகஸ்டு 3, 2026 ல் நடைபெற்ற 16 ஆவது இந்திய உறுப்புதான தின விழாவில் உறுப்பு தானத்தில் இந்தியாவின் சிறந்த மாநிலம் என்ற விருதை தமிழ்நாடு பெற்றிருக்கிறது.

### ‘பாதம் பாதுகாப்போம்’ திட்டம்!

TamilNadu integrated diabetic foot care programme என்ற பாதம் பாதுகாக்கும் திட்டத்தை 2024ல் நாங்கள் ஆரம்பித்தோம். இந்த திட்டம் உலகிலேயே முதல் முறையாக நீரிழிவு நோயாளிகளுக்கு பாதம் பாதுகாக்கும் முன்னோடி திட்டமாக கருதப்படுகிறது.

Health Walk நடப்போம் நலம் பெறுவோம் திட்டம்.

கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்.

இதயம் காப்போம் திட்டம்.

ஊட்டச்சத்து உறுதி செய் திட்டம்.

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை.

பெரியார் அரசு மருத்துவமனை பெரியார் நகர் சென்னை

காஞ்சிபுரம் மையம். காரப்பேட்டை அறிஞர் அண்ணா புற்றுநோய் சிறப்பு

அரசு ஓமந்தூரார் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை

கலைஞர் கருணாநிதி நகர், அரசு புனர்வாழ்வு மருத்துவமனை.

தேசிய முதியோர் நல மையம் என்ற எங்கள் சாதனைகள் வான் உயர நிற்கின்றன.

14 அரசு மருத்துவக் கல்லூரிகளில், 13 சிறப்புப் பிரிவுகளில் 58 மருத்துவ பட்ட மேற்படிப்பு இடங்களை (M.D/M.S), கூடுதலாகத் தொடங்கிய பெருமையும் எங்களுக்கு உண்டு

2024–ஆம் ஆண்டு செப்டம்பர் 25–ஆம் தேதி, நியூயார்க்கில் நடைபெற்ற 79–வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில், WHO ஆல் நடத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் தொற்றா நோய்கள் தடுப்புப் பணிக்குழு (UNIATF), மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்காக, ”சுகாதார அமைச்சகங்கள் பிரிவில் 2024 பணிக்குழு விருதை தமிழ்நாட்டுக்கு வழங்கியது. அந்த ஆண்டு உலகம் முழுவதிலும் பதினான்கு நிறுவனங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டன. தமிழ்நாடு அவற்றுள் ஒன்றாக நின்றது பொரித்து அடுத்தவர் சாதனையில் எங்கள் பெயரைப் புகைப்படத்திற்குப் போட்டியிடவில்லை. மாறாக இறையாண்மை கொண்ட நாடுகளின் சுகாதார அமைச்சகங்களுக்கு இணையாக உலக அரங்கில் அங்கீகரிக்கப்பட்டோம். எங்கள் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களுடைய அரசு ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரத்தை பெற்ற நிகழ்வு அது.

சுகாதாரத்தை ஒரு உரிமையாகக் கருதும் போது, ஆட்சி இப்படித்தான் இருக்கும் – ஐக்கிய நாடுகளே கவனிக்கும் அளவிற்குச் சிறந்த திட்டம். இந்தப் புதிய அரசின் நகைத் திட்டம் உள்ளூர் நகைக்கடைக்காரரின் பட்டியலைத் தாண்டி எங்காவது இடம்பெறுமா என்று பார்ப்போம்.

இப்போது, இந்த அரசின் உண்மையான ஆர்வம் எங்கே சென்றது என்று பார்ப்போம்:

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்திற்காக 560 கோடி ரூபாய்கு ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கடந்த ஜூன் 23, 2026 அன்று வெளியிட்ட அரசாணை எண். 166–ல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் 4.42 லட்சம் குழந்தைகளுக்கு இந்த மோதிரம் வழங்கப்படும் எனத் தெளிவாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், செய்கூலி, சேதாரம் உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கி ஒரு கிராம் மோதிரத்தின் விலை 17,000 ரூபாய் என அரசு நிர்ணயம் செய்துள்ளது.

### நிதி ஒப்பளிப்பு!

இதன் அடிப்படையில், மோதிரம் கொள்முதல் செய்ய 750.83 கோடி ரூபாயும், நிர்வாகச் செலவாக 5 கோடி ரூபாயும் ஒட்டுமொத்தமாக ரூபாய் 755.83 கோடி தேவை சேர்த்து, அதே அரசாணையில் நிதி ஒப்பளிப்பு (Financial Sanction) செய்யப்பட்டுள்ளது.

பட்ஜெட்டில் ஒதுக்கியது 560 கோடி ரூபாய். சுமார் 195 கோடி ரூபாய் பற்றாக்குறை நிலவுகிறது.

இந்தத் திட்டத்தின் நோக்கமே அரசு மருத்துவமனைப் பிரசவங்களை அதிகரிக்க வேண்டும் என்பது OT GOT அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது திட்டமிடப்பட்டுள்ள 4.42 லட்சம் பயனாளிகளுக்கே 195 கோடி ரூபாய் பற்றாக்குறை உள்ள நிலையில் அரசு மருத்துவமனையில் பிரசவங்கள் அதிகரித்தால் இந்த நிதிப் பற்றாக்குறை பல நூறு கோடிகளாக அதிகரிக்கும். இதற்கு இந்த அரசின் பதில் என்ன?

1,000 நடமாடும் மூத்த குடிமக்கள் சிகிச்சை மையங்கள் ஆரவாரத்துடன் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒதுக்கீடு எவ்வளவு தெரியுமா? வெறும் 33 கோடி வகுத்துப் பாருங்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர்களே அது ஒரு மையத்திற்கு 3.3 லட்சம். ஒரு சிறிய கார் விலைக்கு வாங்குவதற்கு அகும் செலவே 3.00 லட்சம், அப்படி என்றால், எந்த வகையான நடமாடும் சிகிச்சை மையத்தை இந்த அரசு நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று எனக்குத் தெரியவில்லை.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களும் தொடரப்படும் என்பது குறித்த, தெளிவான உறுதி மொழியை, முழு நிதி விவரங்களுடன் வெளியிட வேண்டும். வேறு பெயரில் மறைத்து, தங்கள் சொந்தக் கண்டுபிடிப்பாகச் சித்தரிக்கக் கூடாது.

ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் உள்ள காலியிடம் பற்றிய புள்ளிவிபரங்களை சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

### சமூக நீதிப் பார்வை சிதைந்து வரும் அவலம்!

பூஜ்யத்திலிருந்து நாங்கள் கட்டியெழுப்பிய பணியாளர் படை (Medical work force) பராமரிக்கப்படுகிறதா? அல்லது அது மருத்துவ சேவைகள் பற்றிய சமூக நீதி பார்வைகள் இல்லாத, இந்த நிர்வாகத்தில் சிதைந்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் ஒரு நகைப் பட்டியலுக்காக வாக்களிக்கவில்லை. அவர்களிடம் மாற்றம் தருகிறோம் என்று சொல்லித்தான் வாக்கு கேட்டார்கள், அந்த மாற்றம் இந்த மாநிலம் கடினமாக உழைத்துக் கட்டியெழுப்பிய சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்துகிறதா. அல்லது சிதைக்கிறதா என்பதைப் பார்க்கும் உரிமை மக்களுக்கு உண்டு ஐந்து ஆண்டு கால தி.மு.க. ஆட்சியின் சாதனை, ஏழைகளின் மொழியில் எழுதப்பட்டது – விழுப்புரத்தில் உள்ள ஒரு தாய், சேலத்தில் உள்ள ஒரு தினக்கூலித் தொழிலாளி– தூத்துக்குடியில் உள்ள ஒரு முதிய விதவை இப்படி பெரும்பாலும் ஏழை எளிய மக்கள் முதன் முறையாக தங்கள் வீட்டு வாசலிலேயே ஒரு மருத்துவரைக் கண்டனர், அதை ஒரு சர்வதேச அமைப்பே கவனித்தது.

நாங்கள் இந்த அரசை உன்னிப்பாகக் கவனிப்போம். ஏனெனில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றைத்தான் கேட்பார்கள் இந்த அரசு எனக்காக இருக்கிறதா, அல்லது ஒரு வெற்று விளம்பரத்திற்காக உள்ளதா என்ற கேள்வி மக்கள் மனதில் எழும்.

### ஒரு கிராம் வாக்குறுதி!

ஒரு கிராம் வாக்குறுதியை விட அதிக அர்த்தம் கொண்ட ஒரு பதிலை இந்த அரசு மக்களுக்கு தர கடமைப்பட்டுள்ளது.

திராவிட மாடல் அரசு ரூ.5.00 லட்சத்திற்கான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தை வழங்கியது. ஆனால் நீங்கள் ரூ.25 லட்சம் தருவதாக உங்கள் தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டிருந்தீர்கள், அதைப்பற்றி பட்ஜெட்டில் குறிப்பிடாதது ஏமாற்றம் அளிக்கின்றது. அதை எப்போது செயல்படுத்துவீர்கள் என்பதை தெளிவுப்படுத்த வேண்டும்.

இந்த விவாதம் சுகாதார கல்வியையும் உள்ளடக்கியிருப்பதால், NEET குறித்த எனது கருத்தை பதிவு செய்ய வேண்டும்.

2021ல் சட்டப் போராட்டங்கள் மூலம், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மருத்துவ மாணவர்களுக்கு அகில இந்திய ஒதுக்கீட்டில் 27% விழுக்காட்டை பெற்றுத்தந்த தலைவர் முன்னாள் முதலமைச்சர் தளபதியார் அவர்கள்.

எதிர்க் கட்சி தலைவர் எங்கள் இளந்தலைவர் அண்ணன் உதயநிதி அவர்கள் கடந்த ஆட்சியில் துணை முதலமைச்ச ராக இருந்த போது NEET ஒழிப்பு தீர்மானத்தை, ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைக்க காரணமான போராட்டத்தை தலைமை ஏற்று நடத்திய வரலாற்று சிறப்புக்குரியவர் என்பதை பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளேன்.

2023ல் தி.மு.க. அரசு NEET தேர்வு ஒரு பொது நுழைவு தேர்வாக இருக்க முடியாது. இருக்க கூடாது என்று Original Sult அரசியல் சட்டத்தில் 131 பிரிவின் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

இந்தியாவின் (Federal Structure) கூட்டாட்சி முறையில் இப்படி ஒரு அகில இந்திய பொது நுழைவுத் தேர்வு இருக்கக் கூடாது என்று எங்கள் திராவிடமாடல் அரசு, முன்னாள் முதலமைச்சர் தலைவர் தளபதியாரின் வழிகாட்டுதலோடு ஒன்றிய அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கின்றது. இந்த வழக்கில் அரசின் நிலைப்பாடு என்ன என்பதை அறிய விரும்புகின்றேன்.

அரசு பள்ளி மாணவர்களுக்கான NEET பயிற்சி, தேர்வு அழுத்தத்தால் பாதிக்கப்படும் மாணவர்களுக்கான மனநல ஆதரவு (Counselling). அல்லது இவர்கள் இப்போது பேசும் நீட் ”ஒழிப்புக்கு ஒரு உறுதியான நடவடிக்கை இவற்றுக்கு ஒரு ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதா என்று இந்த பட்ஜெட்டில் நான் தேடினேன். வெற்று கூச்சல் தான் உள்ளது. ”இந்தத் திண்ணைப் பேச்சு வீரரிடம் ஒரு கண்ணாயிருக்கனும் அண்ணாச்சி! என்ற பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.





மொழிப்போர் தியாகி, மக்கள் தொண்டர்

மறைதிரு. க.சொ.கணேசன் Ex.MLA அவர்கள்

தோற்றம் : 03-06-1941 | மறைவு : 22-08-2005

“ஜெயங்கொண்டம் பகுதியில் பல எதிர்ப்புகளையும், இழப்புகளையும் சந்தித்து, எது நேர்ந்தபோதும் கழகப் பணியில் பின்வாங்காது நின்ற கொள்கைவாதி, சிறந்த செயல்வீரர்!”

செப் - 06 - 2005

என்றும் உங்கள் இலட்சிய பாதையில் பயணிக்கும்...

க.சொ.க.கண்ணன் M.Com.,

மேனாள் சட்டமன்ற உறுப்பினர் - ஜெயங்கொண்டம்,

ஒன்றிய கழக செயலாளர் - தா.பழூர் (கிழக்கு).

மற்றும் குடும்பத்தினர்கள்

ஒன்றிய தி.மு.க, தா.பழூர்.